# திண்டிவனம் நகராட்சி

## அவசரக்கூட்டம்

## முன்னிலை : **திருமதி.ஆர்.நிர்மலா.,** நகர மன்ற தலைவர்.

29.11.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற அவசரக் கூட்ட பொருள் விபரம்.

| வ. எண் | பொருள் விபரம் |
|---|---|
| 1 | இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகை & இதர செலவினங்களில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி பிடித்தங்களை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டதற்கான விவரங்கள் மாதம் தோறும் Vino & CO எண்.60/48, குழந்தைவேல் தெரு, திண்டிவனம் நிறுவனத்தினால் E-Filling நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது.<br>அதன்படி மேற்கண்ட நிறுவனத்திடம் 2024–2025ம் ஆண்டிற்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரித்தொகை மாதம்தோறும் உரிய அரசுத் தலைப்பில் செலுத்திய விபரங்களை E-Filling செய்திட மேற்கண்ட நிறுவனம் மூலம் அதே விலை விகிதத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.3000 மற்றும் பணியாளர் ஒரு நபருக்கு ரூ.250/– வீதம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3194/2018/பி1)<br>**தீர்மானம் எண் :216, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 2 | இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தங்கள் (GST) உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டதற்கான விவரங்கள் மாதம் தோறும் Vino & CO எண்.60/48, குழந்தைவேல் தெரு, திண்டிவனம் நிறுவனத்தினால் e-Filling நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது.<br>அதன்படி மேற்கண்ட நிறுவனத்திடம் 2024–2025ம் ஆண்டிற்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரிக்கான (GST) தொகை மாதம்தோறும் உரிய அரசுத் தலைப்பில் செலுத்திய விபரங்களை e-Filling செய்திட மேற்கண்ட நிறுவனம் மூலம் அதே விலை விகிதத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.2000/– வீதம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3194/2018/பி1)<br>**தீர்மானம் எண் :217, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 3 | இந்நகராட்சி குத்தகைதாரர்களின் குத்தனை இனங்களில் (Non tax) பிடித்தம் செய்யப்படும் (Service tax) பிடித்தங்களை (GST) உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டதற்கான விவரங்கள் மாதம் தோறும் Vino & CO எண்.60/48, குழந்தைவேல் தெரு, திண்டிவனம் நிறுவனத்தினால் e-Filling நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது.<br>அதன்படி மேற்கண்ட நிறுவனத்திடம் 2024-2025ம் ஆண்டிற்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரிக்கான (GST) தொகை மாதம் தோறும் உரிய அரசுத் தலைப்பில் செலுத்திய விபரங்களை e-Filling செய்திட மேற்கண்ட நிறுவனம் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.2000/- வீதம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3194/2018/பி1)<br>**தீர்மானம் எண் : 218, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 4 | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20, காவேரிப்பாக்கம் கிராமம், வார்டு -E, பிளாக் 11, T.S.NO.1/7A,1/8,1/9,1/12,1/30 மற்றும் வார்டு-E, பிளாக் 12, T.S.NO.30/3-ல் சம்மந்தப்பட்ட 2.33 ஏக்கர் (9,440.00ச.மீ) பரப்புள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண். BPAHCE 20/2024/TCP, நாள்.07.02.2024-ல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்தரவில் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மனைபிரிவு ஒப்புதல் எண்.ம.வ / ந.ஊ.உ.இ (வி.மா)எண்.19/2024-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களுக்கான தானப்பத்திரம் உள்ளாட்சிக்கு பத்திர எண்.208/2024, நாள்.29.01.2024-ல் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.12843/2022/டிடி2, நாள்.20.10.2022-ல் தெரிவித்துள்ளவாறு சாலை, சிறுபாலம், மழைநீர் கால்வாய் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு மூன்றாம் நபர் ஆய்வு நாள்.07.08.2024-ல் ஆய்வு செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தரமாக உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட பொது ஒதுக்கீடுகளை ஏற்கவும், உரிய கட்டணங்கள் செலுத்தி நகர் ஊரமைப்பு துறையின் தொழில்நுட்ப உத்தரவு பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்தி கட்டணங்கள் செலுத்தப்பட்டுவிட்டதாலும், நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.512/எப்1/2024<br>**தீர்மானம் எண் : 219, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 5 | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி வார்டு எண்.10, காவேரிப்பாக்கம் கிராம பழைய சர்வே எண்.20/5A, 20/5B மற்றும் 20/6–ல் வார்டு–E, பிளாக் எண்.9, T.S.NO. 1/13, 1/14 மற்றும் 1/15–ல் சம்மந்தப்பட்ட 2.27 ஏக்கர் அல்லது 9200.00ச.மீ பரப்புள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண். VGFCYH4W/2024/TCP, நாள்.24.07.2024–ல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்தரவில் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மனைபிரிவு ஒப்புதல் எண்.ம.வ / ந.ஊ.உ.இ (வி.மா)எண்.147/2024–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களுக்கான தானப்பத்திரம் உள்ளாட்சிக்கு பத்திர எண்.1618/2024, நாள்.03.07.2024–ல் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.12843/2022/டிடி2, நாள்.20.10.2022–ல் தெரிவித்துள்ளவாறு சாலை, சிறுபாலம், மழைநீர் கால்வாய் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு மூன்றாம் நபர் ஆய்வு நாள்.14.11.2024–ல் ஆய்வு செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் தரமாக உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட பொது ஒதுக்கீடுகளை ஏற்கவும், உரிய கட்டணங்கள் செலுத்தி நகர் ஊரமைப்பு துறையின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அபிவிருத்தி கட்டணங்கள் செலுத்தப்பட்டுவிட்டதாலும், மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண்.2479/எப்1/2024)**<br>**தீர்மானம் எண்:220, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 6 | திண்டிவனம் நகராட்சி 2022–ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் 2.0 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOHUA துறையின் மூலம் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திண்டிவனம் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை , திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும இரண்டாம் நிலை சேகரிப்பு (Secondary Storage) மற்றும் குப்பைத் தொட்டிகள் மூலம் திடக்கழிவுகளை அகற்றம் செய்வது (Bin Free City) முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே திண்டிவனம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக ( Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் ( Three Star Rating) என அறிவிக்கவும். இது சம்பந்தமான நகராட்சி அறிவிப்பினை பொதுமக்களின் ஆலோசனைகள் மக்கள் ஆட்சேபணைகள் கோரி இரண்டு தினசரி நாளிதழ்களில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2886/2015/எச்1)**<br>**தீர்மானம் எண்:221, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

**7**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும், பொதுசுகாதார பணிகளுக்கும் கிருமிநாசினியாக பயன்படுத்துவதற்கு கீழ்காணும் பொருட்களை வாங்கி வழங்கிட ஆகும் தோராய செலவினம் ரூ.4,00,000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. நீர்த்த சுண்ணாம்பு – 15 டன்
2. பிளீச்சிங் பவுடர் – 05 டன்
3. பினாயில் – 200 லி

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2128/2020/எச்1)**

**தீர்மானம் எண்:222, நாள் : 29.11.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**8**

திண்டிவனம் நகராட்சியில் SBM(U) 2.0 2024–2025 திட்டத்தின் கீழ் சமுதாய கழிவறை மற்றும் பொது கழிவரைகளை புதியதாக அமைக்க மன்ற அனுமதி நகர மன்ற தீர்மான எண்.209, நாள்.30.10.2024ல் பெறப்பட்டது. தற்போது கீழ்காணும் விபரப்படியான பங்களிப்பு நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பட்டியலில் கண்டுள்ள விபரப்படி செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பனியின் விவரம் | | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் | GOI Share | GOTN Share | ULB Share |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய சமுதாயக் கழிப்பறைகள் | வார்டு–01, ராஜகோபால் நகர் புதிய சமுதாயக் கழிப்பறை கட்டும் பணி. | 18.00 | 7.95 | 5.26 | 4.79 |
| 2 | | வார்டு–02, அய்யந்தோப்பில் புதிய சமுதாயக் கழிப்பறை கட்டும் பணி. | 18.00 | 7.95 | 5.26 | 4.79 |
| 3 | | வார்டு–04. ரோஷனை அம்பேத்கர் சிலை அருகே புதிய சமுதாயக் கழிப்பறை கட்டும் பணி. | 18.00 | 7.95 | 5.26 | 4.79 |
| 1 | புதிய பொதுக் கழிப்பறை | வார்டு–29, இந்திரா காந்தி பேருந்து நிலையத்தில், புதிய பொது கழிப்பறை கட்டும் பணி. | 31.30 | 13.34 | 8.83 | 9.13 |
| 1 | சமுதாயக் கழிப்பறைகளை மறுசீரமைப்பு செய்தல் | வார்டு–01, சந்தைமேடு பகுதியில் உள்ள சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 2 | | வார்டு–08, முருங்கப்பாக்கம் பகுதியில் உள்ள சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 3 | | வார்டு–09, மூங்கிலம்மன் கோவில் தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 4 | | வார்டு–16, திரௌபதியம்மன் கோவில் அருகில் உள்ள | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | | | | |
| 5 | | வார்டு–20, காவேரிப்பாக்கத்தில் உள்ள சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 6 | | வார்டு–21. கிடங்கல் – 2, கலைஞர் தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 7 | | வார்டு–22, ஆர்.சி.காம்பவுண்ட் பகுதியில் உள்ள சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 8 | | வார்டு–27, பூந்தோட்டம் பகுதியில் உள்ள சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 9 | | வார்டு–27, ஆர்.எஸ்.பிள்ளை தெருவில் (ஏரிக்கோடி) சமுதாயக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 4.42 | 1.87 | 1.24 | 1.31 |
| 1 | பொதுக் கழிப்பறைகள் மறுசீரமைப்பு | வார்டு–17. சுப்ரமணி கோவில் தெருவில் பொதுக்கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 5.40 | 2.18 | 1.44 | 1.78 |
| 2 | | வார்டு–27, பூ மார்க்கெட் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 5.40 | 2.18 | 1.44 | 1.78 |
| 3 | | வார்டு–13, குஷால்சந்த் பார்க் பகுதியில் பொதுக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 5.40 | 2.18 | 1.44 | 1.78 |
| 4 | | வார்டு–19, நேரு வீதியில் உள்ள நம்ம டாய்லட் பொதுக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 5.40 | 2.18 | 1.44 | 1.78 |
| 5 | | வார்டு–26, மரக்காணம் சாலையில் உள்ள இ–டாய்லெட் பொதுக் கழிப்பறை மறுசீரமைப்பு செய்தல் பணி. | 5.40 | 2.18 | 1.44 | 1.78 |

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளை மத்திய அரசு நிதி, மாநில அரசு நிதி மற்றும் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள இப்பணியின் முக்கியத்துவம் கருதி
3. நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

(ந.க.எண். 3745/2023/இ1)

**தீர்மானம் எண்:223, நாள் : 29.11.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

9 இந்நகராட்சியில் வருவாய் நிதி 2024–2025 ஆம் நிதி ஆண்டின் கீழ் 23.10.2024 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் (திருவாளர்கள்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| **வருவாய் நிதி 2024–2025** | | | | | | |
| 1 | 2024–2025 வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மழைகாலங்களில் சாலைகளில் ஏற்படும் மேடு பள்ளங்களை தேவைக்கேற்ப (WMM) வெட்மிக்ஸ் கொண்டு நிரப்புதல் பணி. | 9.80 | T.D.R & Co, திண்டிவனம். | – | –0.05 | T.D.R & Co, திண்டிவனம். |
| | | | சாய்ராம் கன்ஸ்ட்ரக்ஷன், திண்டிவனம். | +8.84 | – | |
| 2 | 2024–2025 வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வார்டு எண். 1 முதல் 33 வரையிலான பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால், கல்வெட்டுகள் (சிறுபாலம்) மற்றும் வெள்ளவாரி வாய்க்கால் ஆகிய இடங்களில் ஜேசிபி இயந்திரம் மூலம் தூர்வாருதல் பணி. | 9.80 | T.D.R & Co, திண்டிவனம். | – | –0.02 | T.D.R & Co, திண்டிவனம். |
| | | | சாய்ராம் கன்ஸ்ட்ரக்ஷன், திண்டிவனம். | +1.96 | – | |
| 3 | 2024–2025 வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மணல் மூட்டைகள், தளவாடப் பொருட்கள் வாங்குதல் பணி. | 3.00 | R.அன்பரசு, விழுப்புரம். | – | –0.45 | R.அன்பரசு, விழுப்புரம். |
| | | | ரா.சாந்தன், விழுப்புரம். | +7.80 | – | |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 7ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3745/2023/இ2)

**தீர்மானம் எண்:224, நாள் : 29.11.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

10 திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்யும் பணி 2024–2025–ன் கீழ் நகரமன்ற தீர்மான எண்.186, நாள்.10.09.2024 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு 16.10.2024 வரை மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதனை தொடர்ந்து வரப்பெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| <u>வருவாய் நிதி–2024–2025</u> | | | | |
| 1 | டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 5 மாத காலத்திற்கு 60 பணியாளர்களை தற்காலிகமாக சப்ளை செய்யும் பணி. | 48.00 | M/s. Human Grid Private Limited Door no.49, Flart No.3, 2nd Floor, | –0.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை |
| | | | M/s. THE RK COMPANY 255DA, Mettutheru / Ashok Nagar Perambalur, Tamil Nadu – 621212. | +2.91% மதிப்பீட்டு விலை விகிதத்தை |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 5ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Human Grid Private Limited. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4144/2022/எச்1)

**தீர்மானம் எண்:225, நாள் : 29.11.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

11 இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 டாக்டர் ராமதாஸ் நகரில் உள்ள மெயின் ரோட்டில் சாலையின் நடுவில் உள்ள மின்கம்பம் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. மின்கம்பத்தை சாலையின் ஓரத்தில் மாற்றி அமைத்து தர கோரி நகரமன்ற உறுப்பினர் கோரியுள்ளார் அதன் அடிப்படையில் மின்கம்பத்தை சாலையின் ஓரத்தில் மாற்றி அமைப்பதற்கு ( EB POLE SHIFTING) தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திலிருந்து வைப்புத் தொகை ரூ.25000/– செலுத்த கோரி கேட்பு அறிவிப்பு வரப்பெற்றுள்ளது எனவே மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்கண்ட தொகையை வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2011/2024/இ2)

**தீர்மானம் எண்:226, நாள் : 29.11.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 12 | இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.3700/2022/இ1 நாள்.07/11/2023-ம் தேதிய பணி உத்தரவின் படி M/S M.H.T எஞ்சினியரிங் , சென்னை என்ற நிறுவனத்திற்கு திண்டிவனம் நகராட்சி எரிவாயு தகன மேடையை பராமரிப்பு பணிகள் செய்து வருகின்றது. தற்போது 30.11.2024 உடன் ஒப்பந்தம் முடிவடைய உள்ளது. மேற்கண்ட நிறுவனம் நல்ல முறையில் பராமரிப்பு பணிகளை செய்து வருவதாக துப்புரவு அலுவலர் சான்றளித்திருப்பதாலும், உடன் ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாததாலும் குறைந்த கட்டணத்தில் பிரேதங்களை எரியூட்டப்படுவதால் பொதுமக்கள் நல்ல முறையில் பயனடைந்து வருவதாலும் 01.12.2024 முதல் 31.12.2024 வரை ஒரு மாத காலத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அதே கட்டண விகிதங்களில் ஒப்பந்த நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், 01.01.2025 முதல் ஓராண்டிற்கு மேற்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 01.01.2025 முதல் ஓராண்டிற்கு மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(**ந.க.எண்**.3700/2022/**எச்**1)<br>**தீர்மானம் எண்:227, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 13 | நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகளின் உள்ள கழிவறைகளை பராமரித்தல் மற்றும் துப்புரவு பணி செய்ய தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமிப்பது குறித்து அரசாணை (நிலை) 77 பள்ளி கல்வித்துறை நாள்.13.04.2015 –ல் ஆணை வழங்கப்பட்டது. அதன்பேரில் இந்நகராட்சியில் உள்ள 7 பள்ளிகளுக்கும் 4 நபர்களை சுய உதவிக்குழு மூலம் தேர்வு செய்து மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் Schedule Of Rate –ன் படி ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.254/– வீதம் ஊதியத்தொகை வழங்க நகர் மன்ற தீர்மான எண். 228 நாள்.30.06.2015–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஊதியத்தொகை நிர்ணயம் செய்து 9 ஆண்டுகள் கடந்துவிட்டதால் தற்போது மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் ReF.I2/E–1984604–17654/2024 நாள்18.07.2024 செயல்முறைகளில் 2024–2025–ம் நிதியாண்டின் Schedule Of Rate–ன் படி Unskilled Labour–க்கு ஒரு நாளைக்கு ரூ.443/– என ஊதியத்தொகையை உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, உயர்த்தப்பட்ட ஊதியத்தொகை ரூ.443/–ஐ 01.11.2024 முதல் புனித அந்தோணியர் சகோதர வாழ்வு சுயஉதவி குழுவிற்கு வழங்கிடவும் மேற்கண்ட கூடுதல் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>பொது சுகாதாரப்பணி அவசியம் கருதி மேற்கண்ட கூடுதல் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2914/2015/எச்1)**<br>**தீர்மானம் எண்:228, நாள் : 29.11.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

14

தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III–ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023–ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன்படி இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2024–ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்–(1) அட்டவணைகள் I, II, மற்றும் III–ல் குறிப்பிட்டுள்ள, பொது அல்லது தனியார் என எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது.

அத்தகைய உரிம வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், திண்டிவனம் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனி நபரை பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினை பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் 17–இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1–ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும்

விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18–இல் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1)–ன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 விதி (5)ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6)–ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன் படிவம் 1–ல் ஆனையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணைகள் I, II, III மற்றும் IV–ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 தேதி முதல் அமுலுக்கு வரும்.

**குறிப்பு:–** (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31–ம் தேதி முடிவடையும்.

**அட்டவணை I**

[See rules 289(1), (2) and (5)]

**1. பொருந்தக்கூடிய தன்மை**

1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXM) 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

**2. உரிமக்கட்டணம் :**

அ) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின்அடிப்படையில் விதிக்கப்படும்.

ஆ) அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர் ஒரு செல்லுபடி ஆகக்கூடிய உதயம் பதிவுச்சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில் உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்று அளித்து படிவம் 17 இல் உள்ள பிரமாண பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ல் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமை கட்டணம் நிர்ணயம் செய்திட குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமை கட்டணங்களுக்காக பட்டியல்

**(A) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/– | 3500/– |

**(B) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/– | 5000/– |

**(C) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/– | 10 00/– |

**(D) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10000/– | 35000/– |

**வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் | அ)குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | ஆ)சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | இ)நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | ஈ)மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள் (மின் மோட்டார்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 11 | அனைத்து வகையான | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | | | | |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 13 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500 /- | 10000/- |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 15 | செங்கல் சூளைகள் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் மற்றும் மூலிகை பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 19 | அனைத்து வகையான கட்டுறுவாக்க பணிகள் (Fabric Works) | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகுக்கூட்டல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 21 | அனைத்து வகையான ரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | | | | |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 25 | கொதிக்கலன் உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 26 | காற்றுப்பதனிகளை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 28 | அனைத்து வகையான எழுது பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோகப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500 – | 10000/– |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 36 | துப்புரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட் களை உற்பத்தி செய்தல் | 1500/– | 3500/– | 7500/– | 10000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 40 | அனைத்து வகையான தொல்பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 41 | அனைத்து வகையான மர /பிளைவுட் / சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 42 | அனைத்து வகையான வன்பொருட்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 0000/- |
| 43 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

**அட்டவணை II**

[See rules 289(1), (2) and (5)]

**1. பொருந்தும் தன்மை**

(1). இந்த அட்டவணை எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்த ஒரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும் அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள் கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

(2). பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:-

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள வகைப்பாடுகள்

